සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

Sponsored by:
Kaalith & Friends Association - Sammanthurai

කොට්ඨාස අධ්‍යාපන කාර්යාලය, සම්මාන්තුරේ
கோட்டக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Divisional Education Office , Sammanthurai

5

PROJECT TO ENHANCE THE PERFORMANCE OF STUDENTS IN GRADE FIVE SCHOLARSHIP - 2024
தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் - 2024

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டதத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகள் உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக் 2 ஐப் பார்க்க

www.ikeduk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

zoom Online வகுப்புக்கள்

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்



ICT

Maths

English

Tamil

History

Science



தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

Contact

76667-4945

1. பின்வரும் உருவை அவதானிக்க. அதனைப் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.




(1) இரண்டு மாணவர்கள் காலை உணவாக பாண் சாப்பிடுகின்றார்கள்.
(2) அண்ணனும் தங்கையும் பகல் உணவு சாப்பிடுகின்றார்கள்.
(3) இரண்டு பிள்ளைகள் உணவு சாப்பிடுகின்றார்கள்.

2. அருகே தரப்பட்ட ஒன்பது அட்டைத் தாள்களையும் ஒழுங்குபடுத்தும் போது பெறப்படும் சரியான உருவினைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்க.






(1)



(2)




(3)

3. பின்வரும் மூன்று உருக்களுள் இரண்டு உருக்கள் ஏதோவொரு வகையில் சமமானவையாகும். அதன்படி பொருத்தமற்ற உருவைத் தெரிவுசெய்க.

(1) 

(2) 


(3) 


4. பின்வரும் வாக்கியத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடை யாது?


எமது பாடசாலையில் விளையாட்டு நிகழ்வு பாடசாலை ..... வெகு சிறப்பாக நடைபெற்றது. மாணவர்கள் இந்த நிகழ்வில் ..... பங்குபற்றினர். எனது நண்பன் ரகுவின் இல்லம் முதலிடம் பெற்றது. இதற்குக் காரணம் அவர்கள் ..... ஈடுபட்டமையாகும்.

(1) மைதானத்தில் மகிழ்ச்சியுடன் வேலையில்
(2) மைதானத்தில் ஆர்வத்துடன் பயிற்சியில்
(3) மைதானத்தில் இரக்கத்துடன் முயற்சியில்

5. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.







(1) 


(2) 

(3) 

[பக் 3 ஐப் பார்க்க

www.ikeu.lk

சுட்டெண் : .....

6. 

அருகே தரப்பட்டுள்ள உருவானது பல சிறிய சதுரமுகிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சதுரமுகித் தொகுதியை இதன் ஆறு பக்கங்களில் இருந்தும் பார்க்கும் போது தோன்றும் மொத்த சிறிய சதுர முகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 46 (2) 16 (3) 36


7. கோலத்திற்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான எண் யாது?



(1) 13



(2) 34



(3) 33


8. பின்வரும் தகவல்களை அவதானித்து கீழ் வரும் வினாவிற்கு விடை தருக.

கடலை 1kg + சீனி 250g = ரூ.110.00	சீனி 250g + மா 500g = ரூ.160.00
கடலை 1kg + மா 500g = ரூ.190.00	

கடலை 2kg + சீனி 500g + மா 1kg இன் விலை யாது?

(1) ரூ.490.00 (2) ரூ.450.00 (3) ரூ.640.00

9. உருக்களை அவதானித்து இடைவெளிக்கு பொருத்தமான பெறுமானத்தை தெரிவுசெய்க.


 = 1  = 2  = ...


(1) 3 (2) 4 (3) 5

10. ஓர் அரசாங்கப் பாடசாலையில் முதலாந் தவணைப் பரீட்சை 6 நாட்கள் நடைபெற்றது. இப் பரீட்சையானது மார்ச் 18 ஆம் திகதி வியாழக்கிழமை தொடங்கியது. மார்ச் 23 ஆந் திகதி அரச பொது விடுமுறைத் தினமாகும். எனின் தவணைப் பரீட்சை முடிவடைந்த நாள் யாது?


(1) வெள்ளிக்கிழமை (2) வியாழக்கிழமை (3) திங்கட்கிழமை

11. எதிர் முகங்கள் ஒத்த வடிவமுடைய சதுரமுகி ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. இச்சதுரமுகியின் விரித்த வடிவம் யாது?






(1)



(2)



(3)

[பக் 4 ஐப் பார்க்க

www.ikeou.lk

12. ☯☯☯ = ☼☼☼☼, ❑❑ = ☯☯☯☯

இத்தகவலை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான தொடர்பை வெளிகாட்டும் விடையை தெரிவு செய்க.


(1) ☯☯☯☯☯ = ☼☼☼☼

(2) ❑❑☯❑ = ☼☼☼☼☯☯

(3) ☯☯☯☼❑ = ☼☼☼☼☼☯☯

13. ஆசிம், சிவா, அமீன், தினேஸ், சச்சின், ரவி, இக்பால், சுனில் ஆகிய 8 பிள்ளைகளும் வட்ட மேசை ஒன்றைச் சுற்றி ஒருவருக்கொருவர் ஒரேயளவான தூரத்தில் அமர்ந்துகொண்டிருந்தனர். பிள்ளைகள் அமர்ந்துகொண்டிருந்தது மேலே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள அதே ஒழுங்கில் ஆகும் அதன்படி, சச்சினுக்கு எதிரே அமர்ந்துகொண்டிருப்பவர் யார்?

(1) ஆசில் (2) சிவா (3) இக்பால்

14. 

A, B ஆகிய பாத்திரங்களின் பருமன் சமனானது. C பாத்திரத்தின் பருமன் A பாத்திரத்தின் பருமனைப்போல் இரு மடங்காகும். அதன்படி, C பாத்திரத்திலுள்ள கடுகின் அளவு A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள கடுகின் அளவுகளுக்குச் சமனாகும். இக்கூற்று,

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

15. பின்வரும் கோலத்துக்கு ஏற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.

6096 →	9609	(1) 6909
6609 →	6099	(2) 9906
9066 →		(3) 9960

16. அப்பாவும் மகளும் மின்னஞ்சல் மூலம் பரிமாறப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - அப்பா எங்கே இருக்கிறீர்கள்?

B - எப்போது அப்பா வீட்டிற்கு வருவீர்கள்?

C - மகள் நான் இப்போது நிறுவனத்தில் இருக்கிறேன்.

D - கட்டாயம் வாங்கி வருகிறேன்.

E - நாளை வீட்டிற்கு வருவேன்.

F - வீட்டிற்கு வரும்போது எனக்குக் கதைப்புத்தகம் வாங்கி வாருங்கள்.

G - மகள் வேறு ஏதும் தேவையா?

மேற்படி உரையாடலை சரியாக ஒழுங்கு படுத்திய விடையைத் தெரிவுசெய்க.


(1) ACBEFGD (2) ACBEFDG (3) ACEBFDG

[பக் 5 ஐப் பார்க்க

www.ikeda.lk

17. தாங்கியொன்றில் 40 லீற்றர் நீர் உள்ளது. தாங்கியிலிருந்து முதலில் A என்பவர். 4 லீற்றர் நீரை வெளியே எடுத்து ஊற்றுகிறார். பின்னர் B என்பவர் 2 லீற்றர் நீரை மீண்டும் தாங்கிக்குள் சிந்தாமல் ஊற்றுகிறார். இவ்வாறு இருவரும் 6 தடவைகள் வீதம் செயற்பட்ட பின்னர் தமது அவ் வேலையை நிறுத்திக் கொண்டனர். எனின் தற்போது பாத்திரத்தில் எஞ்சியுள்ள நீரின் அளவு யாது?

(1) 28 லீற்றர் (2) 26 லீற்றர் (3) 16 லீறற்ர்

18.  இதற்கு  எனின்  இதற்கு ..... ஆகும்.

இடைவெளிக்குப் பொருத்தமானது,



(1)



(2)



(3)

19. 


அருகில் தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பார்க்க, அந்த ஒளிப்படம் நாளின் எந்நேரத்தில் எடுக்கப்பட்டது என்பதை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க

(1) நண்பகல் 12.00 மணி அளவில்


(2) மு. ப. 10.30 மணி அளவில்

(3) மு. ப. 6.00 மணி அளவில்


20. நான்கு கோலங்கள் வீதம் இடம்பெறும் மூன்று உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



உரு 1




உரு 2



உரு 3

உரு 1 இல் இருக்கும் ஆனால் உரு 2 இலும் உரு 3 இலும் இல்லாத கோலம் யாது?



(1)




(2)



(3)

[பக் 6 ஐப் பார்க்க

www.ikedu.lk

21. 


பற்சில்லு **A** சுழலும் திசைக்கேற்ப வாளி பயணிப்பது,

(1) மேல்நோக்கியாகும்

(2) கீழ்நோக்கியாகும்

(3) கூறமுடியாது

22. முதலில் தரப்பட்ட சதுரக் கட்டவலையைப் பெறுவதற்கு **A, B, C, D, E** ஆகிய ஐந்து வடிவங்களில் நான்கினை இணைத்தல் வேண்டும். கட்டவலையைப் பெறுவதற்கு அவசியமற்ற வடிவத்தைக் குறிக்கும் எழுத்து எது?



(1) **A** (2) **C** (3) **D**

23. பழங்கள் சிலவற்றின் விலை தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.


அப்பிள் பழமொன்றின் விலை	=	2 மாம்பழங்களின் விலை
மாம்பழமொன்றின் விலை	=	2 பப்பாசிப் பழங்களின் விலை

பின்வரும் அட்டவணையில் காட்டியுள்ளவாறு பிள்ளைகள் மூவர் கடைக்குச் சென்று பழங்கள் வாங்கினர்.

சினோ	சபேசன்	லைஸா
2 மாம்பழங்கள்	2 அப்பிள் பழங்கள்	4 மாம்பழங்கள்
2 அப்பிள் பழங்கள்	2 பப்பாசிப் பழங்கள்	2 அப்பிள் பழங்கள்
4 பப்பாசிப் பழங்கள்	3 மாம்பழங்கள்	2 பப்பாசிப் பழங்கள்

மேலே உள்ள தகவல்களின் படி பழங்கள் வாங்குவதற்கு அதிக பணம் செலவு செய்த பிள்ளை யார்?

(1) சினோ (2) சபேசன் (3) லைஸா


24. 

அருகில் தரப்பட்டுள்ள உருவில் முக்கோணம் வங்கி ஊழியர்களையும், செவ்வகம் பெண்களையும், வட்டம் சுய தொழில் செய்பவர்களையும் குறித்து நிற்கின்றன.

மேலே உருவில் எந்தப்பகுதி வங்கியில் பணிபுரியும் பெண்களைக் குறிக்கின்றது?

(1) A (2) B (3) C

25. அருகே தரப்பட்டுள்ள எண்சட்டத்தில் காணப்படும் மணிகளில் பத்தாயிரங்களில் காணப்படும் மணிகளை மாற்றாது ஏனைய மணிகளைக் கொண்டு ஐந்திலக்க மிகப் பெரிய எண்ணை அமைக்க ஆகக்கூடியது எத்தனை மணிகளை இடம் மாற்றுதல் வேண்டும்?



(1) 6 மணிகள் (2) 9 மணிகள (3) 4 மணிகள்

www.kesu.lk

26. 

இவ்வுருவின் கீழே முகம்பார்க்கும் கண்ணாடியில் வைக்கப்பட்டுள்ளது. அக்கண்ணாடி ஊடாக பார்க்கும் போது தோன்றும் வடிவம் யாது?



(1)



(2)



(3)

27. 2m நீளமான நாடா ஒன்றின் நடுப்பகுதியில் 18cm சேதமடைந்துள்ளது. சேதமடைந்த பகுதி வெட்டி நீக்கப்பட்ட பின் இரு துண்டுகளும் 5cm ஒன்றன் மீது வைத்து ஒட்டப்பட்டது எனின், நாடாவின் தற்போதய நீளம் யாது?

(1) 177cm (2) 1m 7cm (3) 23cm

28. அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் நேராகச் சொல்லமாட்டார். "என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம் மாற்றிப்போட்டால் என் வயதில் ஒன்பது கூடி விடும்" என்றார். அப்படியானால் அவரின் வயது என்ன?

(1) 63 (2) 45 (3) 18

29. ஹானி தரம் ஒன்றில் பாடசாலை சேரும் போது ஹானியின் வயதின் 5 மடங்கு அவளின் தந்தையின் வயது ஆகும். ஹானி தற்போது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வகுப்பில் கற்கிறாள் எனின், தந்தையின் வயது யாது?

(1) 35 வயது (2) 34 வயது (3) 30 வயது

30. 2023 ஆம் வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய அலிஸா பெறுபேறுகள் வந்ததன் பின்னர் இவ்வாறு கூறினாள். "இன்னும் ஒரு புள்ளி குறைந்திருப்பின் நான் பரீட்சையில் சித்தியடைந்திருக்க மாட்டேன்." இக்கூற்றின் மூலம் சொல்லப்படும் கருத்து

(1) அலிஸா பரீட்சையில் சித்தியடைந்துள்ளாள் என்பதாகும்.
(2) அலிஸா பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்றுள்ளாள் என்பதாகும்.
(3) அலிஸா பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதாகும்.

31. 

தரப்பட்ட இரகசிய குறியீட்டால் குறிப்பிடப்பட்டிருக்கும் இதன் சரியான விடை எதுவாக இருக்கும்?

(1) 884248 (2) 553447 (3) 669336


32. 

A




B


உரு A இல் காட்டப்பட்டுள்ள கடதாசிக் கீற்றை இரண்டாக மடித்து மறுபடியும் இரண்டாக மடித்து எல்லாக் கடதாசிப் பகுதிகளும் அடங்குமாறு உரு B இல் உள்ளவாறு வெட்டி முற்றாக விரிக்கும் போது கிடைக்காத உரு யாது ?



(1)



(2)



(3)

33. 2 ✸ 2 = 2 ♦ 2 இச் சமன் பாட்டில் ✸ , ♦ இக் குறியீடுகள் குறித்து நிற்பவை,

(1) X , X (2) + , + (3) + , X


[பக் 8 ஐப் பார்க்க

34. சரியாக நடுப்பக்கத்தில் இணைக்கும் கம்பியை பயன்படுத்தி ஆக்கப்பட்ட 80 பக்கங்களைக் கொண்ட அப்பியாசப் புத்தகத்தில் 23 ஆம் 24 ஆம் பக்கங்களுக்குரிய தாள்கள் முழுமையாகக் கிழிந்து அகற்றப்படும் போது அதனுடன் புத்தகத்தில் இருந்து கழன்று விழக்கூடிய இரண்டு பக்கங்களும் எவை?

(1) 63 உம் 64 உம் (2) 26 உம் 28 உம் (3) 57 உம் 58 உம்

35. மரதன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் ஒன்பது பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்குத் திரும்பினர். இப்போது மரதனுக்கு முன்னால் ஐவர் நின்றனர். எனின் அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றனர்.

(1) 15 (2) 14 (3) 13

36. 


அருகில் தரப்பட்டுள்ள கேக்கை சமனான 16 துண்டுகளாக வெட்டுவதற்கு கத்தியொன்றினால் வெட்ட வேண்டிய மிகக் குறைந்த தடவைகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 5 (3) 7

37. கமலின் தங்கை கமலா ஆவாள். அவளுக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். எனின் கமலுக்கு இருக்கும் சகோதரிகளின் எண்ணிக்கை என்ன?

(1) 2 சகோதரிகள் (2) 3 சகோதரிகள் (3) 4 சகோதரிகள்


38. கீழே தரப்பட்டுள்ள உரு **A** இன் நடுவில் இருக்கும் புள்ளி மீது உரு **B** இன் நடுவில் இருக்கும் புள்ளி இருக்குமாறு உரு **A** மீது உரு **B** ஐ வைக்கும்போது கிடைக்கும் உருக்களாக,



(1) **X, Y** வரலாம் (2) **X, Z** வரலாம் (3) **Y, Z** வரலாம்

39. மூன்று கம்பி சட்டங்கள் கீழே காணப்படுகின்றன. முனை **Z** இல் இருக்கும் ஓர் எறும்பு ஒரே பாதையில் இரு தடவைகள் செல்லாமல் எல்லா பாதைகளிலும் செல்லத்தக்க சட்டம் எது?

(1) 

(2) 

(3) 

40. A , B , C ஆகிய பண்ணைகளில் விலங்குகள் பின்வருமாறு இருக்கின்றன.

- பண்ணை C இல் உள்ள எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு விலங்குகள் பண்ணை B இல் உள்ளன.
- B , C ஆகிய பண்ணைகளில் உள்ள விலங்குகளின் மொத்த எண்ணிக்கை A இல் உள்ள விலங்குகளுக்கு சமமாகும்.
- பண்ணை B இலிருந்து பண்ணை C இற்கு 5 விலங்குகளை கொடுக்கும் போது பண்ணை B இல் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை 15 ஆகும்

மேலுள்ள கூற்றுக்களின் படி மூன்று பண்ணைகளிலும் உள்ள மொத்த விலங்குகளின் எண்ணிக்கை.

(1) 45 (2) 50 (3) 60

www.ikeou.lk

කියවූ ම කිසිසේ ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

Sponsored by:
Kaalith & Friends Association - Sammanthurai

කොට්ඨාස අධ්‍යාපන කාර්යාලය, සම්මන්තුරේ
கோட்டக் கல்வி அலுவலகம், சம்மாந்துறை
Divisional Education Office , Sammanthurai

5

PROJECT TO ENHANCE THE PERFORMANCE OF STUDENTS IN GRADE FIVE SCHOLARSHIP - 2024
தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் - 2024

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரியவிடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடையின்கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் புள்ளிக் கோட்டின்மீது எழுதுக
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
02	
03	
04	
05	
06	
07	
08	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப் படுத்துகின்றேன்	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகள் உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

[பக் 2 ஐப் பார்க்க

www.ikeduk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

ஒருநாள் எங்கள் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரின் பங்குபற்றுதலுடன் சிரமதானம் நடைபெற்றது. சிரமதானம் செய்வதற்கான அடிப்படை நோக்கம் பாடசாலைத் தோட்டத்தைச் சுத்தம் செய்வதாகும். பூப்பாத்திகளை அமைத்தல், பாடசாலை வளவினுள் உள்ள பொருட்களை உக்குகின்றவை, உக்காதவை எனத் தெரிந்து வேறுபடுத்தல், குப்பை கூளங்களை அகற்றுதல் ஆகிய செயற்பாடுகள் அங்கு இடம்பெற்றன. இதன் பொருட்டு பெரியவர்கள், சிறியவர்கள் அனைவருமே மிகுந்த விருப்பத்துடன் பங்குபற்றினர். பங்குபற்றிய அனைவருக்கும் அதிபர் அவர்கள் நன்றி கூறியதுடன் நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்தது. எனது பாடசாலை இப்போது எவ்வளவு அழகாயிருக்கின்றது என்று எனக்குத் தோன்றியது.

பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

1. சிரமதானத்தில் பங்குபற்றியவர்கள் யாவர்?

.....

2. சிரமதானம் செய்வதற்கான அடிப்படை நோக்கம் யாது?

.....

3. சிரமதானத்தின் போது நடைபெற்ற செயற்பாடு ஒன்றை எழுதுக?

.....

4. எதிர்க்கருத்துச் சொற் சோடி ஒன்றை எழுதுக.

.....

5. பாடசாலை பற்றி மாணவனுக்குத் தோன்றியது யாது?

.....

6. "நீக்குதல்" என்பதன் கருத்தை தரும் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

.....

02. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

1. காலையில் பூக்கள் நறுமணம் வீசியது. (.....)
2. மழைத்துளியும் சூரியஒளியும் வானவில் தோன்றுவதற்கு அவசியமாகின்றன. (.....)
3. நானும் தம்பியும் பூங்காவிற்குச் சென்று விளையாடினோம். (.....)
4. ஆசிரியர் கூறியதை மாணவர்கள் அவதானமாகக் கேட்டன. (.....)

03. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக மாற்றி இறந்தகாலத்தில் எழுதக.

சூரியன் அதிகாலையில் கிழக்கில் உதிக்கும்.	சூரியன் மாலையில் மேற்கில் மறையும்.

.....

04. பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

1. (i) பலவீனம் (ii) பலயீனம் (iii) பளயீனம (iv) பலவீணம்
2. (i) எண்ணைய் (ii) எண்நெய் (iii) எண்ணெய் (iv) என்நெய்

05. (i) பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொல் ஒவ்வொன்றை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. புனிதம் :..... 2. தண்மை :.....

(ii) கீழே தரப்பட்டுள்ள சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. அவற்றை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஒரு சொல்லாக ஆக்கி புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. ஆடல் கமை :..... 2. மொய் தாழி :.....

06. பிரித்தெழுதுக. புகழுரை = ... + ...

www.ikeou.lk

சுட்டெண் : .....

07. பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்

.....

08. (i) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

ஞயம்பட உரை என்று ஔவையார் கூறுவதன் பொருள் என்ன

(ii) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்குக.
வையுங்கள் / பற் தூரிகைப் / பின்னர் / பெட்டிக்குள் / துலக்கிய / பற் தூரிகையைப் / பல்

.....

.....

09. (i) அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளதில் சரியானதை தெரிவுசெய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

(அ) சாந்தனின் வயலில் பெண்கள் ஓடி ஆடி வேலை செய்தனர். இங்கு "ஓடி ஆடி" என்பது ..... ஆகும்.(இரட்டைக்கிளவி / இணைமொழி / தொடர்மொழி)

(ஆ) "உணவு உண்டபின்னர் பீங்கானை தட்டின் மேல் வையுங்கள் " என்பது ..... ஆகும்.(அறிவுறுத்தல் / கட்டளை / அறிவித்தல்)


(ii)

விபுலானந்தா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மயூரன், சுந்தரமூர்த்தியின் பத்து வயது மகனாவார். இவர் ஒரு திறமையான மாணவன் ஆவான். இவரின் சித்தப்பா ரகுவரனும் அதே பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.

மேற்படி தகவலை அடிப்படையாகக் கொண்டு பந்தியில் குறிப்பிடப்படும் மாணவனின் முழுப் பெயரை எழுதுக.

10. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)



		A				A			

(ii)



	Q				R				

11. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

(i) you / pet ? / Do / a / have :.....

(ii) book / I / a / am / reading :.....

12. ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய தமிழ்ச்சொல்லை எழுதுக.

(i) Drumsticks -..... (ii) Sparrow - .....

13. பெப்போல் (පැපොල්) என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....


14. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

அம்மா சோறு சமைக்கிறார் :.....

[பக் 4 ஐப் பார்க்க

www.ikeon.lk

15. எண் சட்டத்தில் வகைக்குறிக்கப்படும் எண்ணின் எண் பெயரை எழுதுக?



: .....

16.

8	1
7	4

அடைப்பில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி 7 இன் இலக்கப் பெறுமானம் 700 ஆகவும் 1 இன் இலக்கப் பெறுமானம் 10 ஆகவும் கொண்டு உருவாக்கக்கூடிய நான்கு இலக்க எண்கள் இரண்டினை எழுதுக.

: ....

17. பின்வரும் எண் கோலத்தை இனங்கண்டு இரண்டு வெற்றிடங்களுக்கும் பொருத்தமான இரண்டு எண்களையும் எழுதுக.

....., ..., 10, 15, 21, 28

18. சொற்களில் தரப்பட்டுள்ள எண்ணின் எண்குறியை எழுதுக.

ஒன்பதாயிரத்து அறுபத்தொன்று :.....

19. புகையிரதம் ஒன்று முதலாவது புகையிரதத் தரிப்பிடத்திலிருந்து 205 பயணிகளுடன் பயணத்தை ஆரம்பிக்கின்றது. இரண்டாவது தரிப்பிடத்தில் 98 பயணிகள் புகையிரதத்திலிருந்து இறங்கியதுடன் 89 பயணிகள் புகையிரதத்தினுள் ஏறினர். இரண்டாவது தரிப்பிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் போது புகையிரதத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

: .....

20. மாதுளம் பழங்கள் 48 இன் நான்கின் மூன்று பங்கு ($\frac{3}{4}$) மாதுளம் பழங்கள் எத்தனை?

: .....

21. ஒன்றுக்கொன்று சமனான அடிகளைக் கொண்ட 4 முக்கோணப் பக்கங்களினால் மாத்திரம் ஆக்கப்படும் கேத்திரகணிதத் திண்மப் பொருள் எது?

: .....


22. 69 மீற்றர் நீளமுள்ள சுவர் ஒன்றைக் கட்டுவதற்கு இரண்டு நாட்கள் எடுத்தன. முதலாவது நாளில் 28 மீற்றர் 19 சென்ரிமீற்றர் நீளம் கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாம் நாளில் கட்டப்பட்ட நீளம் யாது?

: ..... மீற்றர் ..... சென்ரிமீற்றர்

23. இப்போது நேரம் முற்பகல் 11.35 எனின், இன்னும் 3 மணித்தியாலம் 25 நிமிடங்களின் பின்னர் நேரம் என்ன?

: .....

24.





இஸ்கா இரு பென்சில் துண்டுகளின் நீளத்தை அளப்பதற்காகப் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளவாறு உடைந்த சென்ரிமீற்றர் கோல்கள் இரண்டைப் பயன்படுத்தினாள். இரு பென்சில் துண்டுகளின் நீளங்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?

: .....சென்ரிமீற்றர்

[பக் 5 ஐப் பார்க்க

www.ikeau.lk

25. 864 மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்காக 8 பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒவ்வொரு பேருந்திலும் சமமான எண்ணிக்கைகளில் மாணவர்கள் பயணம் செய்தனரெனின், ஒரு பேருந்தில் பயணம் செய்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

: .....

26. ஒரு நாளில் கடை ஒன்றில் இருந்த 49 kg அரிசியில், விற்கப்பட்ட அரிசியின் அளவு 16 kg 750 g ஆகும். அன்றைய நாள் மீதியாக இருந்த அரிசியின் அளவு யாது?

: ..... kg ..... g


27. பின்வரும் சிட்டையின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

பொருள்	ஒன்றின் விலை		எண்ணிக்கை	விலை	
	ரூபாய்	சதம்		ரூபாய்	சதம்
பென்சில்	9	50	4		
250g அங்கர் பக்கட்			3	825	00
			மொத்தம்	863	00

28. 5 லீற்றர் குளிர்பானம் கொள்ளத்தக்க ஒரு பாத்திரத்தினை முழுமையாக நிரப்புவதற்கு 250 மில்லிலீற்றர் பாத்திரத்தினால் குளிர்பானத்தை எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்?

: .....

29. மாணவர் குழு ஒன்று மிகவும் விரும்பும் பழ வகைகள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.



(i) அப்பிள் பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை, மாம்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை விட எவ்வளவு குறைவானது?

: .....

(ii) குழுவிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

: .....

● 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமாக விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


30. ஓரளவு ஒத்த வடிவத்தைக் கொண்ட இலைக் கூட்டம்?
(1) பலா, கத்தாப்பு (2) கரும்பு, அகத்தி (3) வெண்டி, புளியம் இலை

31. காசித்தும்பைச் செடிகள் இரண்டை வேர்கள் அறாதவாறு கவனமாகப் பிடுங்கியெடுத்து அவற்றில் ஒரு செடியை நிறமூட்டிய நீர்ப் பாத்திரமொன்றினுள்ளும் மற்றைய செடியை தெளிவான நீருள்ள பாத்திரம் ஒன்றினுள்ளும் இட்டு வேர்ப்பகுதி மாத்திரம் அமிழுமாறு நான்கு நாட்கள் வரை வைத்து விஜய் அவதானித்தான். அவன் இச்செயற்பாட்டை செய்தமைக்கான காரணம் யாதாக இருக்கலாம்?
(1) தாவரங்கள் தண்டின் மூலம் சுவாசிக்கின்றன என்பதைக் கண்டறிய
(2) தாவரங்கள் இலைகளின் மூலம் உணவு தயாரிக்கின்றன என்பதைக் கண்டறிய
(3) தாவரங்கள் வேரின் மூலம் நீரை உறுஞ்சுகின்றன என்பதைக் கண்டறிய

[பக் 6 ஐப் பார்க்க

www.ikeduk

32. தேசிய இலச்சினையில் காணப்படும் எப்பகுதி "நாடும் கட்டுப்பாடான மக்களும்" எனும் கருத்தை உணர்த்தி நிற்கும் பகுதி எது?



(1) A
(2) B
(3) C

33. சகல சமயத்தவர்களும் யாத்திரை செல்லும் இடமாக அமையாதது?
(1) கதிர்காம யாத்திரை (2) சிவனொளிபாதமலை யாத்திரை (3) ஹஜ் யாத்திரை

34. பிராணிகளின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய மனித செயற்பாடாக அமையாதது?
(1) இரசாயனப் பசளையிடல்
(2) அதிகமான தாவரங்ளை வளர்த்தல்
(3) கொதிநீரை நிலத்தில் கொட்டுதல்

35. இலங்கை மாகாணங்களைக் காட்டும் தேசப்படம் காட்டப்பட்டுள்ளது.
இதில் A குறிக்கும் மாகாணத்தில் அமையப்பெற்ற மாவட்டங்கள் எவை?



(1) கேகாலை, இரத்தினபுரி
(2) அநுராதபுரம், பொலனறுவை
(3) பதுளை, மொனராகலை

36. காலைக்கூட்டத்தில் மயக்கம் ஏற்பட்ட மாணவன் ஸஹற்றுலுக்கு, முதலுதவி பயிற்சி பெற்றவன் என்ற வகையில் நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டிய விடயம்.
(1) மாணவனுக்கு நீர் புகட்டுவதற்கு முயற்சித்தல்
(2) மாணவனின் நெஞ்சின் மீது இருகைகளாலும் மெதுவாக அழுத்தி மூச்சு வர முயற்சித்தல்
(3) மாணவனுக்கு நன்றாக மூச்செடுத்து விடக்கூடியவாறான சூழலை வழங்குதல்

37. சூழல் மாற்றத்தை அறிவிக்கும் பிராணியாக அமையாதது?
(1) மெருன் (2) கபரகொய்யன் (3) பருந்து

38. பெருக்குமரம், நாகமரப்பூங்கா என்பன காணப்படும் இடங்கள் முறையே,
(1) மன்னார் , அநுராதபுரம் (2) பொலன்னறுவை , அநுராதபுரம் (3) அநுராதபுரம் , கண்டி

39. கறுப்புப் புள்ளிகள் ஏற்படுதல், சிவப்பு நிறமும் எச்சிற்றன்மையும் ஏற்படுதல் போன்ற தன்மைகளைக் காட்டும் பழுதடைந்த உணவுப் பொருள்
(1) பாற்சோறு (2) தேங்காய்ப்பாதி (3) பாண்

40.  படத்தில் தைத்துக் காட்டப்பட்டுள்ள தையல் முறை

(1) சங்கிலித் தையல் (2) நூலோடி (3) கம்பளித் தையல்

41. எமது நாட்டில் அனைத்து பிள்ளைகளும் கற்கவேண்டும் என்பதற்காக அரசினால் இலவசமாக வழங்கப்படும் சலுகையாக கருதமுடியாதது?
(1) சீருடை (2) பாடநூல் (3) பயிற்சிக் கொப்பிகள்

42. ஆதிகால மனிதர்களின் தொடர்பாடல் முறைகளில் ஒன்று
(1) பத்திரிகை (2) முரசறைதல் (3) கைப்பேசி

43 பிறருடன் பேசும் போது நாம் எப்போதும் நிதானமாகக் கருத்துக்களைத் தெரிவிக்காத விடத்து ஏற்படும் பாதிப்பு?
(1) நட்பைத் தொடர்ச்சியாகப் பேண முடிதல்
(2) முரண்பாடுகள் அதிகரித்தல்
(3) சமூகத்தில் நல்ல ஒருவராகத் திகழ்தல்

[பக் 7 ஐப் பார்க்க

www.ikeduu.lk

44. "வண.எஸ். மஹிந்த தேரர்" என்பவரின் வரலாறு இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் பெறுவது
(1) நவ லங்கா சமய பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்தமையால்
(2) சிலோன் நஸனல் ரிவீவ் எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்தமையால்
(3) தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றில் கமிட்டி அங்கத்தவராக இருந்தமையால்

45. மூன்று மாணவர்களின் மதிய உணவுக்காக வைக்கப்பட்டிருந்த உணவு வகைகள் பற்றிய விபரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது. மூன்று மாணவர்களுள் நிறையுணவை உட்கொண்ட மாணவன் யார்?

பாமா	சோறு	முருங்கை இலை	போஞ்சி	மீன்
அமீன்	சோறு	பொன்னாங்கண்ணி	காளான்	வாழைப்பழம்
பாலன்	சோறு	வல்லாரை	இறைச்சி	கருவாடு

(1) பாமா
(2) அமீன்
(3) பாலன்

46. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தைக் காட்டும் சரியான ஒழுங்கு?

(1) 

(2) 

(3) 

47. எட்டு வயது மாணவன் வீதியில் செல்லும் போது பேருந்துடன் மோதிக் காயப்பட்டார். இதற்கான காரணமாகக் கருதக்கூடியது.
(1) குழுமமாகச் சென்றிருக்கலாம்.
(2) வெள்ளைக் கோட்டின் வழியே சென்றிருக்கலாம்.
(3) வீதியின் வலது பக்கமாகச் சென்றிருக்கலாம்.


48. நீர் மாசடையும் முறைகளில் ஒன்றாக கருத முடியாதது?
(1) எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளின் கழிவுகள் நீருடன் சேர்தல்
(2) விவசாய நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படும் பீடை நாசினிகள் நீருடன் சேர்தல்
(3) நீருக்கு குளோரினிடல்

49. நீங்கள் பாடசாலைக்கு கொண்டுவந்து உண்ட உணவின் எஞ்சியதைப் போடுவதற்கு பயன்படுத்தப்படும் தொட்டியின் நிறம் என்ன?
(1) நீலம் (2) பச்சை (3) செம்மஞ்சள்

50. அரச பேருந்துகளில் விசேடமான ஆசனம் ஒதுக்கப்படாதோர்?
(1) வலது குறைந்தோர் (2) சிறுவர்கள் (3) மதகுருக்கள்

51. "சவர்க்காரம்" தனித்தனியாகப் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருப்பது
(1) வீட்டிலுள்ள ஏனையோரும் அவ்வாறுதான் செய்ய வேண்டும் என்பதற்காக
(2) அலங்காரமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக
(3) நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக

52. படத்தில் காட்டப்படும் செயற்பாடு மூலம் அவதானிக்கப்படுவது,



(1) நீர் வடிகட்டப்படுகின்றது
(2) மழை பெய்யும் போது மண்ணில் ஏற்படும் மாற்றம் அவதானிக்கப்படுகின்றது
(3) மழை வீழ்ச்சி அளக்கப்படுகின்றது

53. உடன் உணவுகள், எண்ணெய், மிளகாய் அடங்கியுள்ள உணவுகள் அதிகளவில் உண்பதால் ஏற்படும் நோய் யாது?
(1) உயர் குருதியமுக்கம் (2) நீரிழிவுநோய் (3) இரப்பையழற்சி

www.ikeau.lk

54.  படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் கூறப்படும் தகவல் யாது?

(1) கவனமாகக் கையாளவும் (2) நொருங்கக்கூடியது (3) அருந்தக்கூடாது


55. "வேலையை இலகுவாக்கும் பொறியையும் அப்பொறியுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டையும் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) பாக்குவெட்டி - இழுத்தல் (2) கப்பி - தள்ளுதல் (3) கைவண்டி - தள்ளுதல்

56. வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திச் செடியை நடுவதன் நோக்கம்.

(1) வீட்டுத் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு
(2) பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு
(3) வீட்டுத்தோட்டத்தின் இட அளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

57. உலர்மின்கலம் ஒன்றிற்கு மின்குமிழ் இரண்டு செப்புக் கம்பிகளினால் இணைக்கப்பட்டுள்ள முறையை உரு காட்டுகின்றது. அதன்படி தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) A, B இரண்டும் ஒளிரும்
(2) A, B இரண்டும் ஒளிராது
(3) A மாத்திரம் ஒளிரும்

58. வெற்று முகவை, குளிரான நீர் கொண்ட முகவை, சூடான நீர் கொண்ட முகவை என்றவாறு மூன்று கண்ணாடி முகவைகளைத் தயார் செய்து மூன்று முகவையிலும் ஒரே அளவான பனிக்கட்டித் துண்டுகளை இட்டு அவதானித்தபோது,

(1) குளிரான நீர் கொண்ட முகவையில் இடப்பட்ட பனிக்கட்டிகள் முதலில் உருகி நீருடன் கலந்தன.
(2) குளிரான நீர் கொண்ட முகவையில் இடப்பட்ட பனிக்கட்டிகளை விட வெற்று முகவையில் இடப்பட்ட பனிக்கட்டிகள் முதலில் உருகி நீரானது.
(3) குளிரான நீர் கொண்ட முகவையில் இடப்பட்ட பனிக்கட்டிகளை விட சூடான நீர் கொண்ட முகவையில் இடப்பட்ட பனிக்கட்டிகள் முதலில் உருகி நீருடன் கலந்தன.

59. "ஒரு நல்லபிள்ளையாக இருக்க என்னால் முடியும் எல்லாவற்றிலும் என்னால் வெற்றி பெற முடியும்." எனும் கூற்று மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எத்தனையாவது படிமுறையாகும்?

(1) படிமுறை - 3 (2) படிமுறை - 4 (3) படிமுறை - 5

60. உமது பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் அம்மாணவர்களால் சிறிய மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் இடம்பெற்றது. "நீங்கள் தரம் ஒன்றிற்கு வரவேற்கப்பட்டபோது..." அந்த நேரத்தில் உங்களது உள்ளத்தில் தோன்றிய உணர்வுகள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலை தொடர்பும் எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1 .....

.....

2 .....

.....

3 .....

.....

www.ikeduk

கோட்டக் கல்வி அலுவலகம்-சம்மாந்துறை
Divisional Education Office-Sammanthurai

தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம் - 2024

புள்ளித்திட்டம்

வினாத்தாள்-I

1)	3	11)	2	21)	1	31)	1
2)	2	12)	3	22)	3	32)	2
3)	2	13)	1	23)	3	33)	3
4)	2	14)	2	24)	1	34)	3
5)	3	15)	2	25)	1	35)	1
6)	1	16)	2	26)	3	36)	1
7)	2	17)	1	27)	1	37)	2
8)	3 அனைவர்க்கும்	18)	3	28)	2	38)	1
9)	2	19)	2	29)	2	39)	2
10)	1	20)	3	30)	1	40)	3

(2.5 X 40 = 100)

வினாத்தாள்-II

01.	1.	ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்(ஏதாவது 2)	புள்ளி-1
	2.	பாடசாலைத் தோட்டத்தைச் சுத்தம் செய்தல்	புள்ளி-1
	3.	குப்பை கூளங்களை அகற்றுதல் / பூப்பாத்திகளை அமைத்தல்	புள்ளி-1
	4.	உக்குகின்றவை - உக்காதவை / பெரியவர்கள் - சிறியவர்கள்	புள்ளி-1
	5.	எமது பாடசாலை இப்போது எவ்வளவு அழகாயிருக்கின்றது	புள்ளி-1
	6.	அகற்றுதல்	புள்ளி-1
02.	1.	X	புள்ளி-1
	2.	✓	புள்ளி-1
	3.	✓	புள்ளி-1
	4.	X	புள்ளி-1
03.		சூரியன் அதிகாலையில் கிழக்கில் உதித்து மாலையில் மேற்கில் மறைந்தது	புள்ளி-1
04.	1. பலவீனம்	2. எண்ணெய்	புள்ளி-2
05. (i)	1. தூய்மை / சுத்தம்	2. குளிர்ச்சி / சாந்தம்	புள்ளி-2
(ii)	1. கடலாமை / கடல் ஆமை	2. தாய்மொழி	புள்ளி-2
06.		புகழ் + உரை	புள்ளி-1
07.		இரக்கப் போனாலும் சிறக்கப் போ	புள்ளி-1
08.		(i) "ஞயம்பட உரை" என்று ஔவையார் கூறுவதன் பொருன் என்ன?	புள்ளி-1
		(ii) பல் துலக்கிய பின்னர் பற் தூரிகையைப் பற் தூரிகைப் பெட்டிக்குள் வையுங்கள்	புள்ளி-1

www.ikeduk.lk

09. (i) (அ) இணைமொழி (ஆ) கட்டளை புள்ளி-2

(ii)

சு	ந்	த	ர	மு	ர்	த்	தி		ம	யூ	ர	ன்

புள்ளி-1

10. (i) BLACKBOARD (ii) SQUIRREL புள்ளி-2

11. (i) Do you have a pet ? (ii) I am reading a book புள்ளி-2

12. (i) முருங்கைக்காய் (ii) குருவி புள்ளி-2

13. பப்பாசி புள்ளி-1

14. அம்மா பத் உயனவா புள்ளி-1

15. நான்காயிரத்து முந்நூற்று நான்கு புள்ளி-2

16. 4718, 8714 புள்ளி-2

17. 3, 6, புள்ளி-2

18. 9061 புள்ளி-2

19. 196 புள்ளி-2

20. 36 புள்ளி-2

21. நான்முகி புள்ளி-2

22. 40 மீற்றர் 81 சென்ரிமீற்றர் புள்ளி-2

23. பி.ப. 3.00 மணி புள்ளி-2

24. 2 சென்ரிமீற்றர் புள்ளி-2

25. 108 புள்ளி-2

26. 32 kg 250g புள்ளி-2

27. 275.00 , 38.00 புள்ளி-2

28. 20 தடவைகள் புள்ளி-2

29. (i) 3 (ii) 36 புள்ளி-4

30)	1	38)	1	46)	2	54)	2
31)	3	39)	2	47)	1	55)	3
32)	2	40)	1	48)	3	56)	2
33)	3	41)	3	49)	2	57)	1
34)	2	42)	2	50)	2	58)	3
35)	3	43)	2	51)	3	59)	3
36)	3	44)	1	52)	2		
37)	2	45)	2	53)	3		

புள்ளி-30

மனிதன் என்ற அடிப்படையில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்
மன்னித்து, திருத்தம் செய்து மாணவர் கற்றலுக்கும் உயர்வுக்கும் உதவுங்கள்

01 - 14	- 32 புள்ளிகள்
15 - 29	- 32 புள்ளிகள்
30 - 59	- 30 புள்ளிகள்
60	- 06 புள்ளிகள்
மொத்தப்புள்ளிகள்	-100 புள்ளிகள்

www.lkedu.lk